# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

பாதுகாப்பு அமைச்சு

## கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## Supply Installation and Commissioning of the Hyperbaric Oxygen Therapy Unit for University Hospital

**Contract Identification No.: MOD/KDU/03/2021**

1. பின்வரும் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, இரத்மலான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் சார்பில் பாதுகாப்பு அமைச்சு பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.

   Supply, Delivery, Installation, Commissioning, Training and maintenance of one (01) number Hyperbaric Oxygen Therapy (HBOT) Unit for University Hospital of General Sir John Kotelawala Defence University.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. HBOT இன் வழங்கல் மற்றும் பராமரிப்பில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம் மற்றும் வியாபார பதிவு மற்றும் 10 வருட அனுபவத்தையுமுடைய உற்பத்தியாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டு விலைமனுதாரர்கள் உரிய முறையில் நியமனம் பெற்ற (அங்கீகரிக்கப்பட்ட) உள்ளூர் முகவரினூடாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

   மேற்குறிப்பிட்ட உள்ளூர் முகவரானவர் ஆகக் குறைந்தது 5 வருட வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   அனைத்து வர்த்தக நாமம்/ இனங்கள் 5 வருட சேவைக் காலத்தை இலங்கையில் அல்லது உற்பத்தி நாட்டில் கொண்டிருத்தல் வேண்டும்.

   விலைமனுதாரர் உதிரிப் பாகங்கள், மென்பொருள் மற்றும் துணைப்பொருட்கள் ஆகியனவற்றின் கையிருப்பை 10 வருட உத்தரவாதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   உத்தரவாத காலத்தினுள் இணைக்கப்பட்ட முறைமை தொடர்பான எந்தவொரு ஐயவினாவிற்கும் பதில் தருவதற்காக உள்ளூர் அலுவலகம் அல்லது உள்ளூர் பதிவு பெற்ற முகவரொருவர் இருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த பூர்த்தி செய்யப்படும் காலமானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 90 நாட்காட்டி நாட்களாகவிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை, பொரலஸ்கமுவ, வேரஹேர, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை பெறுகை அலுவலகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (மின்னஞ்சல்: **procurement_uh@kdu.ac.lk** தொலைபேசி 011-2044555-நீடிப்பு 4373, தொலைநகல்: 011-2044592.

   விலைமனுக்கோரல் ஆவணங்கள் கீழேயுள்ள முகவரியில் 2021.10.25 ஆம் திகதியிலிருந்து 2021.11.15 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

   பெறுகை கிளை, பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே
   தொலைபேசி: 011-2390719, தொலைநகல்: 011-2390720 மற்றும்
   **procurement@defence.lk**

6. விலைமனுதாரர் மற்றும் அவர்களின் உள்ளூர் முகவர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

7. கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

   **பிரதான நிதியிடல் அலுவலர் 1**
   **இரண்டாம் மாடி**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**

   மற்றும்

   பாதுகாப்பு அமைச்சிற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 36,000 இலங்கை ரூபாவை (முப்பத்து ஆறாயிரம் இலங்கை ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணம் 2021.10.25 ஆம் திகதியிலிருந்து 2021.11.15 ஆம் திகதி வரையும் வழங்கப்படும்.

   1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களின் கீழ் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் தீவிரமாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

8. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் 2021.11.16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும்.

   **பிரதான நிதியிடல் அலுவலர் 1**
   **இரண்டாம் மாடி**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**

   தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. அனைத்து விலைமனுக்களும் முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபா (3,750,000 இலங்கை ரூபா) பெறுமதியானதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்றதும் முதல் விண்ணப்பத்திலேயே ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமானதும் உத்தரவாதத்துடனும் 2021.11.16 ஆம் திகதியிலிருந்து 2022.03.15 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும். (விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 119 நாட்காட்டி நாட்கள்) விலைமனுப்பிணையின் பயனாளியானவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆவார்.

   விலைமனுக்கள் 2021.11.16 ஆம் திகதியிலிருந்து 2022.01.17 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (விலைமனுக்களை சமர்ப்பித்தலிலிருந்து மூடும் திகதி வரையும் 91 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. **தொடர்பிற்கான விபரங்கள் பின்வருமாறு:**
    **பிரதான நிதியிடல் அலுவலர் (I)**
    **தொலைபேசி: 0094 11-2439381**
    **தொலைநகல்: 0094 11-2390720**
    **மின்னஞ்சல்: procurement@defence.lk**

11. ஆகக் குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனுக்கள் திறத்தலில் பங்கேற்கும் நபரின் பெயர் மற்றும் தேஅஅ-கடவுச்சீட்டு ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியிடல் அலுவலர் (I) எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

    மேலும், விலைமனுதாரர்கள் எழுத்தில் பின்வருபவருக்கு தெரிவிக்கும்படி அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

    பிரதான நிதியிடல் அலுவலர் (1)
    பாதுகாப்பு அமைச்சு – உரித்தான பெறுகைக்காக எந்தவொரு உத்தியோக விடயம் தொடர்பாக பங்கேற்கும் பெயர் நபரின் தேஅஅ-கடவுச்சீட்டு இலக்கம் ஆகியவற்றை தெரிவித்தல் வேண்டும்.

12. 2021.11.02 ஆம் திகதியன்று பொரலஸ்கமுவ, வேரஹேர, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அமைச்சு பல்கலைக்கழக வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் பணிப்பாளரின் மாநாட்டு மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

**21.10.2021**